(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 145.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 மே 05, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

107/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, இலங்கை மின்சார சபை ஈட்டியுள்ள இலாபம் அல்லது அடைந்த நட்டம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) நட்டம் அடைந்திருப்பின், அதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகள் யாவை என்பதையும்;

(iii) மின்சார சபை தற்போது இலாபம் ஈட்டுகின்றதாயின், அதன்மூலம் மின்சாரப் பாவனையாளர்களுக்கு ஏதேனும் சலுகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, மின்சார சபையினால் கம்பெனிகளுக்குச் செலுத்தியுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்தகைய கம்பெனிகளுடன் நிறைவேற்றிக்கொண்டுள்ள உடன்படிக்கைகள் தொடர்பான மீளாய்வு அல்லது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவ்விடயம் தொடர்பில் அமைச்சின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

233/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்தில் சிவில் மேன்முறையீட்டு அதிகாரத்தை நடைமுறைப் படுத்துகின்ற மாகாண மேல் நீதிமன்றத்தை பாணந்துறை நீதிமன்ற வளாகத்தில் தாபிப்பதற்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த விதப்புரையை நடைமுறைப்படுத்துவதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பாணந்துறை, ‘சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றத்தை’ இயன்றளவு விரைவில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

361/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘த பினான்ஸ்’ நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக 2021.02.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அப்போதைய விடயத்திற்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் அவர்கள் கூற்றொன்றை வெளியிட்டதை அமைச்சர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அனுமதி வழங்கப்பட்ட திகதி மற்றும் தகுதியான முதலீட்டாளர் ஒருவரை அழைத்த திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தை கலைப்பதற்காக இலங்கை மத்திய வங்கி 2021.02.15 ஆம் திகதி வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளதாகவும்;

(ii) அது மேற்படி கூற்றுக்கு முரணானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்திலிருந்து பாதிக்கப்பட்ட வைப்பாளர் ஒருவருக்கு ரூ. 500,000/- வீதம் செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்தி வைப்பாளர்களின் முழுமையான பணத்தைச் செலுத்த முடியுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) 2019 சனவரி மாதம் விசேட நிலையான வைப்பு வசதிகள் விகிதத்தின் கீழ் மாதத்திற்கு ஒரு பில்லியன் ரூபா என்ற அடிப்படையில் மத்திய வங்கி 950 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை ஈட்டுவதற்கு ‘த பினான்ஸ்’ நிறுவனத்திற்கு இடமளித்து, பின்னர் அதன் உரிமத்தை இரத்துச் செய்ததை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

467/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்குமாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ள நட்சத்திர வகுப்பு ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும் அவை செயற்பட்டு வரும் வருடங்களையும், அவற்றிலுள்ள அறைகளின் எண்ணிக்கையினையும் அங்குள்ள நேரடியான மற்றும் மறைமுகமான ஊழியர்களின் எண்ணிக்கையினை மாவட்ட வாரியாகவும்;

(ii) இதே காலப்பகுதிக்காகப் பதிவுசெய்யப்பட்ட Airbnb இணையத்தளங்களின் எண்ணிக்கையினையும்;

(iii) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் மொத்த ஈட்டல்களையும் தலா நபர் ஈட்டல்களையும்;

(iv) இயங்குகின்ற Booking.com நிறுவனங்களின் எண்ணிக்கையினையும்;

(v) அவை ஈட்டிய தொகை மற்றும் செலுத்திய வரிகளையும்;

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் சராசரியாகத் தங்கியிருக்கும் காலம்;

(ii) வருடாந்தம் மீண்டும் வருகை தருவோரின் எண்ணிக்கை;

(iii) 2020 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை சிங்கப்பூர், தாய்லாந்து, ஜப்பான், அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, மலேசியா, துபாய், இந்தியா, துருக்கி, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, வியட்நாம், பிரான்ஸ், மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சுற்றுலாத் தொழிற்துறையின் பலவீனத்தையும்;

(ii) அதன் பாதகமான தாக்கத்தினையும்;

(iii) இவ்வாறான பலவீனங்களை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

568/2025

கௌரவ ரோஹண பண்டார,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டளவில் இலங்கை மின்சார சபை அரச வங்கிகளில் கடனைப் பெற்றுக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அவ்வங்கிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பெறப்பட்ட கடன்களில் தற்போது செலுத்த வேண்டிய கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மின்சார சபை வங்கிகளில் கடன் பெற்றுக்கொள்வதை குறைப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

642/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.02.09 ஆம் திகதி இலங்கை முழுவதுமாக மின் தடை ஏற்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வலுசக்தி அமைச்சினாலும் இலங்கை மின்சார சபையினாலும் நியமிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு குழுவினதும் அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி குழுக்களின் அறிக்கைகள் மூலமாக வெளிக்கொணரப்பட்டுள்ள விடயங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி மின்சாரத் தடைக்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களின் பெயர்கள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி குழுக்களின் அறிக்கைகள் மூலமாக வெளிக்கொணரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1176/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய சபாநாயகரின் தனிப்பட்ட பணியாட்டொகுதியின் ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பதவிப் பெயர்கள் மற்றும் கல்வித் தகைமைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லமாக 'சபாநாயகர் உத்தியோகபூர்வ இல்லம்' பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) அந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சபாநாயகரால் நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் கல்வித் தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சபாநாயகர் மற்றும் அவரது ஊழியர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த வாகனங்களின் இலக்கங்கள், வகைகள் மற்றும் மாதாந்த எரிபொருள் கோட்டா வாகனங்களுக்கு ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அந்த வாகனங்களுக்கு எரிபொருள் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகிறது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கொழும்பு 04, லோரிஸ் ஒழுங்கையில் அமைந்துள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்குச் சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் சபாநாயகரால் ஒரு வீடு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வீடு தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதையும்;

(iii) அவ்வீட்டின் வாடகை, நீர் மின் பட்டியலுக்கான செலுத்துகைகள் யாரால் செய்யப்படுகின்றது என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1632/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 03 ஆண்டுகளில் க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி மாணவர்களில் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை;

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, அந்தந்த ஆண்டுகளில் ஆரம்பப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக;

ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1935/2026

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது நாட்டின் நன்னீர் மீன்பிடி, இறால் மற்றும் அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழில்களுக்கு பொறுப்பாகவுள்ள நிறுவனம் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி அதிகாரசபை கடந்த ஆட்சிக் காலத்தில் குறித்த துறைகளின் தேவைகளுக்கு அமைய வசதிகளை செய்து கொடுத்துள்ளதா;

(iii) அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற மீன் மற்றும் இறால் இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை;

(iv) நாட்டில் வளர்ப்புக்குப் போதுமான மீன் மற்றும் இறால் குஞ்சுகளை வழங்கும் இயலுமையை அதிகாரசபை கொண்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அதிகாரசபையில், கடந்த காலத்தில் நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா;

(ii) அதிகாரசபையானது நீர் உயிரின வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்றைக் கொண்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1947/2026

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் 2019 ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் அடைந்துள்ள முழுமையான நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அதில் தொழிற்பாட்டு நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தால் விமானங்களுக்காகச் செலுத்தப்படும் வருடாந்தக் குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி குத்தகைத் தவணை/கடன் தவணைக் கொடுப்பனவு செலுத்தப்படும் விமானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கடனுக்காக வருடாந்தம் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படிக் கடன் தவணையில் உள்ள மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பணம் தூய்தாக்கல் தடை (திருத்தம்),— 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் சிபாரிசுகளை கருத்திற்கொண்டு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 16 ஆம் திகதிய 2471/55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 பெப்புருவரி 13 ஆம் திகதிய 2475/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 18, 24, 28 மற்றும் 30 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் (ஏ) மற்றும் (ஒ) பந்திகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 17 ஆம் திகதிய 2471/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 சனவரி 05 ஆம் திகதிய 2470/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*16.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

17.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

1969/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரிசி, சோளம், சீனி, பயறு வகைகள், பால் உற்பத்திப் பொருட்கள், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பிரதான உணவுப் பொருட்களின் இறக்குமதியைப் படிப்படியாக குறைத்து, 2027-2040 காலப்பகுதியில் அவற்றில் தன்னிறைவு அடைவதற்காகக் காலக்கெடுவுடன் கூடிய ஓர் தேசிய உபாயமார்க்கம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2027ஆம் ஆண்டு முதல் உணவுப் பொருள் இறக்குமதியில் எதிர்வுகூறப்பட்ட வருடாந்தக் குறைப்பு இலக்குகளையும் மற்றும் அத்தகைய எதிர்வுகூறல் களுக்காகப் பயன்படுத்தப்பட்ட அடிப்படை ஆண்டையும்;

(iii) நீர்ப்பாசன நவீனமயமாக்கல், இயந்திரமயமாக்கல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, காலநிலை மாற்றத்திற்குத் தாக்குப்பிடிக்கும் விதைத் தொழில்நுட்பம், களஞ்சிய உட்கட்டமைப்பு, குளிர்ச்சங்கிலி முறைமைகள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களின் பதப்படுத்தல் ஆற்றல் ஆகியவற்றுக்காகத் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள மூலதன முதலீட்டையும்;

(iv) விவசாயிகளின் நிலைத்து நிற்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மாவட்ட ரீதியான அறிவியல் பயிர் வலயமிடல், ஒப்பந்த விவசாய மாதிரிகள் மற்றும் உத்தரவாதக் கொள்வனவுப் பொறிமுறைகள் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளனவா என்பதையும்;

(v) முக்கியமான வியாபாரப் பண்டங்களின் இறக்குமதியைக் கணிசமானளவு இல்லாதொழித்து, வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்கு இலங்கை எந்த ஆண்டளவில் எதிர்பார்க்கிறது என்பதையும்;

(vi) குறித்த உபாயமார்க்கம் ஏற்றுமதிக்கான மிகை உற்பத்தியை எதிர்வுகூறுகின்றதா என்பதையும்;

(vii) அவ்வாறெனில், அடையாளம் காணப்பட்டுள்ள வியாபாரப் பண்டங்கள், இலக்குச் சந்தைகள் மற்றும் மதிப்பிடப்பட்டுள்ள காலச்சட்டகம் என்பவற்றினையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1970/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் தற்போது பதிவுசெய்யப் பட்டுள்ள சுற்றுலா நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) ஒழுங்குறுத்தல் சட்டகத்திற்கு வெளியே செயற்படும் பதிவு செய்யப்படாத இயக்குனர்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையினையும்;

(iii) கடந்த 02 ஆண்டுகளில் சட்டவிரோத அல்லது விதிமுறைகளுக்கு இயைபுறாத இயக்குனர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையினையும்;

(iv) மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கையினையும் அவை தொடர்பாக விதிக்கப்பட்ட அபராதங்கள் எவ்வளவு என்பதையும்;

(v) சேர் பெறுமதி வரி நிலுவைகள், சுற்றுலா அபிவிருத்தி அறவீடு மற்றும் சுற்றுலா நிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டிய ஏனைய நியதிச்சட்டக் கட்டணங்கள் உட்பட மொத்த நிலுவையில் உள்ள வரிப் பொறுப்புகள் எவ்வளவு என்பதையும்;

(vi) கடந்த 04 ஆண்டுகள் ஒவ்வொன்றுக்காகவும் தேசிய சுற்றுலா அபிவிருத்தி அறவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட வருடாந்த வருவாய் எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்;

(vii) சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு விகிதாசாரமாக அத்தகைய வருவாய் அதிகரித்துள்ளதா என்பதையும்;

(viii) தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ள உரிமம் பெற்ற சுற்றுலா வழிகாட்டிகளின் எண்ணிக்கையினையும் அவர்களுக்கு எதிராகப் பெறப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையினையும்;

(ix) வெளிப்படைத்தன்மை, இயைபுறல் மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கை என்பவற்றினை மேம்படுத்துவதற்காகத் திருத்தப்பட்ட சுற்றுலாச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தல் மறுசீராக்கல்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாக பரிசீலிக்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1971/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்குக் கைத்தொழிலானது, கைத்தொழிலாக தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு எது என்பதையும் இற்றை வரை ஏற்பட்டுள்ள பிரதான அடைவு மற்றும் கொள்கைத் தலையீடுகள் யாவை என்பதையும்;

(ii) கடந்த 50 வருடங்களில் அதி கூடிய உற்பத்தி காணப்பட்ட ஆண்டுகள் எவை என்பதையும் மிக அண்மைய வருட உற்பத்தி யாதென்பதையும்;

(iii) தெங்குப் பயிர்ச்செய்கையின் கீழ் உள்ள அதிகூடிய நிலப்பரப்பு என்ன என்பதையும் அது பதிவு செய்யப்பட்ட ஆண்டு எது என்பதையும்;

(iv) தற்போது பயிர்ச்செய்யப்படும் நிலப் பரப்பின் விஸ்தீரணத்தினை மாவட்ட/ மாகாண ரீதியாகப் பிரித்து எவ்வளவு எனவும் இதில் ஏதேனும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) ஏக்கர்/ஹெக்டேயர் ஒன்றுக்கான தற்போதைய தேசிய சராசரி விளைச்சல், மாவட்ட ரீதியான விளைச்சல்கள், முதல் மற்றும் கடைசி விளைச்சல் பெறும் 5 மாவட்டங்கள் மற்றும் மதிப்பிடப்பட்ட விளைச்சல் இடைவெளி யாவை என்பதையும்;

(vi) இலங்கைக்கும் தெங்கு உற்பத்தி செய்யும் ஏனைய 6 முக்கிய நாடுகளுக்கும் இடையிலான ஒப்பீட்டு விளைச்சல் தரவினையும் அதன்படி இலங்கையின் தரவரிசை எது என்பதையும்;

(vii) அமுலாக்கல் காலச்சட்டகம் உள்ளடங்கலாக, உள்நாட்டில் ஏற்று நடைமுறைப்படுத்தப்படவுள்ள நடைமுறைகள் யாவை என்பதையும்;

(viii) பிரதான ஏற்றுமதிச் சந்தைகளுடன் சேர்த்து, கடந்த 5 ஆண்டுகளில் ஈட்டப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்;

(ix) நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழிலுக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(x) கடந்த 10 ஆண்டுகளில் ஆராய்ச்சி, நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கம் என்பவற்றுக்கான கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?